Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 36 /2026**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோகுல் | கிராமம் | : | மொரப்பூர் |
| தந்தை பெயர் | : | ரவி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 36 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09**th** Day of **June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மொரப்பூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான நந்தினி என்பவர் மகப்பேறு விடுப்பில் சென்றுள்ள காரணத்தினலும், அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இன்று ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன்.

கடந்த 11.10.2025ம் தேதி காலை 11.30 மணிளவில் காவல் உதவி ஆய்வாளர் நந்தினி அவர்களது தலைமையில் அசா1 மற்றும் அசா2 ஆகியோர்களுடன் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக மொரப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட

பகுதியான ராணிமூக்கனூர் கிராமம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது எதிரி ஒரு பையில் எதையோ மறைத்து வைத்திருந்தார். போலீசாரை கண்டதும் தப்பியோட முயற்சி செய்துள்ளார். அவரை பிடித்து விசாரித்து எதிரி வைத்திருந்த பையை சோதனை செய்தபோது அந்த **பையில் 180ml old Chef பாட்டில் -26** இருந்துள்ளது. அதைபற்றி எதிரியிடம் கேட்ட போது எதிரி அரசு மது பான கடையில் வாங்கி பொது மக்களுக்கு அதிக விலைக்கு சில்லரை விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார். காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அந்த இடத்திலேயே கைது செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் அசா1 மற்றும் 2 முன்னிலையில் எதிரியிடம் இருந்து **பையில் 180ml old chef பாட்டில் -26** பாட்டில்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் கைப்பற்றிய 26 மதுபாட்டில்களை அந்த இடத்திலேயே காவலர்களாகிய அசா1 மற்றும் 2 முன்னிலையில் கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்துள்ளார்.

பின்பு கைதுசெய்யப்பட்ட எதிரியுடன் காவல் நிலையம் வந்து மொரப்பூர் காவல் நிலைய குற்ற எண். 201/2024 சட்ட பிரிவுகள் 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு கைது செய்த எதிரியை நிலை பிணையில் விடுவித்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே காவலர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அத்தடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி அம்சா மீது 11.10.2024ம் தேதி அன்று சட்ட பிரிவு 4(1)(C) TNP Actன் படி இறுதி

அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவயிடத்தை குறிப்பிடும்பொருட்டு இந்த வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரை விசாரித்தார்கள் என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் 4 மாதம் கழித்து 06.03.2025ம் தேதிதான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அதை பற்றிய விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் காவல் நிலையத்திலேயே வைத்து வழக்கு ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**